**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. NO.31/2013**

**21.06.2023 - பி.வா.சா. 1 ஜானகியம்மாள் சத்திய பிரமாணத்தின் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பி.வா.சா.ஆ.2 உயிலை பற்றிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. என் அம்மா இறந்த பிறகு அந்த உயில் எனக்கு கிடைக்கப்பெற்றது. என் தாயார் 1 முதல் 11 இன சொத்துக்களை யாரிடம், எப்போது, எவ்வளவு தொகைக்கு கிரையம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அனைத்து கிரையங்களுமே என் தகப்பனார் கிரையத் தொகை கொடுத்து என் தாயார் பெயரில் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் தாயாருக்கு தனிப்பட்ட வருமானம் இல்லை என்றால் சரியல்ல. மளிகை கடை நடத்தி வந்தார். என் தகப்பனார் தான் மளிகை கடையை என் சகோதரர்களின் துணை கொண்டு நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. எனக்கு 10 வயது ஆகும்போதே என் தகப்பனர் ஆஸ்மா நோயால் அவதிப்பட்டார். அதற்கான ஆதாரத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தவறாக சொல்கிறேன் என்றும், என் தகப்பனார் தான் பஸ், மளிகை கடை வியாபாரம் ஆகியவற்றை நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. தாவா 12வது இன சொத்து என் தகப்பனார் வாங்கியது என்று சொன்னால் சரிதான். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் பக்கம் 3ல் தாவா 12ம் இன சொத்தை என் தாயார் கிரையம் பெற்று அனுபவித்து வந்தார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எப்போது கிரையம் வாங்கினார் என்று எனக்கு நியாபகம் இல்லை. மோட்டார் வாகன சட்டப்படி பர்மிட்டை விலைக்கு விற்க முடியாது என்று சொன்னால் சரிதான். நான் பொய்யாக என் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த பஸ்சை குடும்ப நன்மைக்காக என் தகப்பனார் என் தாயார் பெயரில் எழுதி வைத்தார் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா பெயரில் இருந்த போதிலும், என் தாயார்

பெயரில் இருந்த போது இரண்டு பஸ்களையும் வாதிகள் தான் பார்த்து வந்தார்கள் என்றால் சரியல்ல. என் பெற்றோர் தான் 12வது இன சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்பதை காட்டக்கூடிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. டி.என்.25 ஏ 6935 புதிய பஸ்சை வாங்குவதற்கு 2ம் வாதி, மற்றும் அவரது மனைவி ஐசிஐசிஐ வங்கியில் வா.சா.ஆ.25 மூலம் ரூ. 14 லட்சம் கடன் வாங்கி அதனை செலுத்தியுள்ளார் என்றால் அவர் கடன் வாங்கி செலுத்தியிருப்பார். வாதிகள் வா.சா.ஆ.27 முன்னிலைக்கு எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்யிருந்தார்கள் என்றால் சரிதான். அதற்கு வா.சா.ஆ.28 முன்னிலைக்கு பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 29ன் படி 2017ல் புதிய பேருந்து வாங்குவதற்கு 1ம் பிரதிவாதி பெயரில் சுந்தரம் நிதி நிறுவனத்தில் கடன் பெற்று அதனை திருப்பி செலுத்தியதற்கான வங்கி கணக்கு என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. என் தாயாருடன் பிறந்தவர்கள் மொத்தம் 6 பேர். ஜானகி, ஆண்டாள் என் தாயார் மீது வழக்கு தாக்கல் செய்து ஆரணி நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அது என் தாயாரின் சொத்தாகும். சொத்து இன்னும் பிரிக்கப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 2ஐ குறித்து ஆரணி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 82/2021 வழக்கை 2ம் வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அவ்வழக்கு நிரந்தர உருத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. என் அப்பாவிற்கு உடல் நிலை சரியில்லாமல் 8.8.2012ல் அவசர சிகிச்சை பிரிவு விஜயா மருத்துவமனையில் வாதிகள் சேர்த்தார்கள் என்றால் சரிதான். அதனை தெரிந்து கொண்டு நானும் என் தாயாரும் 8.8.2012ல் 5 தான செட்டிமெண்டை உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. பேருந்தை என் இரண்டு சகோதரர்களும் இயக்கி வருகிறார்கள் என்றால் சரிதான். நானோ, என் தாயாரோ,

என் மகனோ எந்த காலத்திலும் தாவா 12ம் இன சொத்தை அனுபவித்ததில்லை என்றால் என் தாயார் அனுபவித்து வந்தார். என் அம்மா இருக்கும்போதே வாதிகள் தான் பேருந்தை பார்த்து வந்தார்கள். பஸ்சை இயக்குவதற்கு மோட்டார் தீர்ப்பாயத்தில் தீர்ப்பு வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். அதன் பேரில் தான் நான் பேராண்மை மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் அனைத்தும் என் தகப்பனாரின் வருமானத்தில் வாங்கப்பட்டவை என்றும், என் தாயார் அதனை எந்த காலத்திலும் அனுபவித்ததில்லை என்றும், தான செட்டில்மெண்ட் எழுத என் தாயாருக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 1 முதல் 5 தான செட்டில்மெண்ட் குறித்து 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் ஏற்பாடாது என்று சொன்னால் சரியல்ல. என் தாயாரை வற்புறுத்தி செட்டில்மெண்ட் எழுதிக் கொண்டோம் என்றால் சரியல்ல.

ஓம்/- ஜானகி

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.